செய்தி வெளியீடு எண்:285 நாள்: 16.06.2021

# செய்தி வெளியீடு

மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் பதிவுத்துறையின் பணி சீராய்வு கூட்டம் இன்று (16.06.2021) பிற்பகல் 2.00 மணியளவில் சென்னை சைதாப்பேட்டையில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த பதிவுத்துறை மற்றும் வணிகவரி துறை வளாக கட்டடத்தின் முதல் தளத்தில் அமைந்துள்ள வணிகவரி பயிற்சியரங்கத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு செயலாளர் திருமதி. பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., பதிவுத்துறை தலைவர் திரு. ம. ப. சிவன் அருள், இ.ஆ.ப., அனைத்து கூடுதல் பதிவுத்துறை தலைவர்கள், நேர்முக உதவியாளர்(பொது), அனைத்து மண்டல துணைப்பதிவுத்துறை தலைவர்கள், மாவட்டப்பதிவாளர்கள்(நிர்வாகம்), மாவட்ட வருவாய் அலுவலர்(முத்திரை) சென்னை மற்றும் உதவி செயற்பொறியாளர்கள், சென்னை / மதுரை ஆகியோர் கலந்துகொண்டனர்.

மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள் அனைத்து பதிவு அலுவலர்களும் பொது மக்களிடம் கனிவாக பேசி அவர்களின் சந்தேகங்களை போக்கி அவர்களுக்கு மனநிறைவான அனுபவத்தினை ஏற்படுத்தி தர அறிவுறுத்தினார். மேலும், பதிவு அலுவலர்கள் அனைவரும் எவ்வித புகாருக்கும் இடமின்றி நடந்து கொள்ள வேண்டும் எனவும், வெளிப்படை தன்மையை பேணவேண்டும் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

பதிவுத்துறையில் பத்திரப்பதிவு தொடர்பான புகார்கள் பெறும் கட்டுப்பாட்டு அறை பதிவுத்துறை தலைவர் அலுவலகத்தில் 3 அலுவலர்களுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பதிவு அலுவலர்கள் மீதான மற்றும் பத்திர பதிவு தொடர்பான புகார்களை 9498452110, 9498452120, 9498452130 என்ற அலைபேசி வழியாக அலுவலக நேரத்தில் தெரிவிக்கலாம் எனவும் வாட்ஸ் ஆப் மூலமும் புகாரினை அளிக்கலாம் எனவும் அளிக்கப்படும் புகார்கள் மீது உடனுக்குடன் தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

அரசின் வருவாயை எவ்வித கசிவுமின்றி வசூலிக்க முழு கவனம் செலுத்த அனைத்து அலுவலர்களையும் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார். நிலுவை ஆவணங்களை சரியாக இருப்பின் உடன் விடுவித்தல், தணிக்கை இழப்புகளை வசூலித்தல், சரியான ஆவணங்களை தாமதமின்றி பதிவு செய்தல் முதலான யுக்திகளை கையாண்டு வருவாயை பெருக்க அரசு செயலாளரால் அறிவுறுத்தப்பட்டது.

ஆவணங்கள் பதிவு நாளன்றே திரும்ப வழங்கியுள்ளனரா என்பது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களால் சீராய்வு செய்யப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் சராசரியாக 83 சதவீதம் ஆவணங்கள் பதிவான அன்றே திரும்ப வழங்கப்பட்டுள்ளன. சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், தஞ்சாவூர் ஆகிய மண்டலங்களில் இந்த சதவீதம் குறைவாக உள்ளமை சுட்டிக்காட்டப்பட்டு பதிவு நாளன்றே ஆவணங்களை திரும்ப வழங்குவதில் தாமதிக்கும் அலுவலகங்களை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டது.

மாண்புமிகு அமைச்சர் அவர்களால் நிலுவை ஆவணங்கள் குறித்து சீராய்வு செய்யப்பட்டது. அதிகளவில் நிலுவையிலுள்ள அலுவலகங்களை மாதந்தோறும் துணைப்பதிவுத்துறை தலைவர் மற்றும் மாவட்டப்பதிவாளர்கள் திடீராய்வு மற்றும் இதர ஆய்வுகளின்போது கண்டறிந்து நிலுவையினை குறைக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டது.

அலுவலகம் மற்றும் சுற்றுப்புறத்தினை தூய்மையாக வைத்து பராமரிக்க வேண்டும் எனவும், கோவிட் 19 தொற்று ஏற்படாவண்ணம் கை கழுவும் வசதி ஏற்படுத்தி தருதல், தனி மனித இடைவெளியை உறுதி செய்தல், கிருமி நாசினியை உபயோகப்படுத்துதல் போன்றவற்றை கடைபிடிக்க வேண்டும் எனவும், ஆவணப்பதிவுக்கு வரும் பொதுமக்களுக்கு மனநிறைவான அனுபவத்தினை ஏற்படுத்தி தர வேண்டும் எனவும் அரசு செயலாளரால் அறிவுறுத்தப்பட்டது.

அனைத்து அலுவலர்களும் சீரிய முறையில் பணியாற்றவும், வருவாய் இலக்கினை அடைந்திடவும் மீள மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டு கூட்டம் இனிதே நிறைவுற்றது.

*********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9